Supply of electricity to factories

* 686 *Q*.—Sri S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is any possibility of the removal of restriction in the supply of electricity to factories like B & C Mills in the City of Madras?

The Hon. Sri V. RAMAIAH : It is not possible for the present to remove the existing restrictions in supply of electricity to B & C Mills and other factories receiving H.T. Supply in Madras City area.

Sri S. PAKKIRISAMI PILLAI : பி. அண்டு ஸி. தொழிலாளர்கள் சொல்வது போலவே மற்ற ஜில்லாக்களில் உள்ள சில விவசாயிகளுக்கு இந்த தொழிலாளர்களைக் கஷ்டப்படும்படி செய்து விட்டு மின்சாரக் கட்டுப்பாட்டை வைத்துவிட்டு கிராமப்புறங்களில் விஸ்தரிப்பதாகச் சொல்வது அநியாயமானது. இதை நீக்கி எல்லாத் தொழிலாளர்களுக்கும் கட்டுப்பாடற்ற வேலை நேரம் கிடைக்கும்படியாகச் செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

The Hon. Sri V. RAMAIAH : கிராமங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிப்பது அநியாயமானது என்று கனம் அங்கத்தினரைப் போல எல்லா அங்கத்தினர்களும் கருதிவிட்டால் எனக்குக் கஷ்டமே இருக்காது. கிராமத்திற்குக் கொடுப்பதனால் நகரங்களில் பாதிக்கப்படவில்லை. நகரங்களிலேயே அதிகமாக ஏற்பட்டுக்கொண்டிருக்கிற தொழில்கள் எல்லாவற்றிற்கும் மினசாரம் கொடுக்கவேண்டும் என்பதற்கு ஓரளவு இந்தக் கட்டுப்பாடு வைத்திருக்கிறோம்.

Sri P. S. CHINNADURAI : இந்த மாதிரியாக தொழிற்சாலைகளுக்கு மின்சாரக் கட்டுப்பாட்டை வைத்திருப்பதனால் தொழிலாளர்கள் குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன. அதன் காரணமாக அவர்கள் குடும்ப வாழ்க்கையே பாதிக்கப்பட்டிருப்பதை கோவைமாவட்டத்தில் பல தொழிலாளர்களுடைய குடும்பங்களில் பார்க்கலாம். தொழிலாளர்களுடைய நன்மையை உத்தேசித்தாவது, தொழில் வளரவேண்டும் என்கிற எண்ணத்திலாவது தொழிற்சாலைக்கு விதிக்கப்படுகிற கட்டுப்பாட்டை ரத்து செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri V. RAMAIAH : நமது ராஜ்யத்தில் மின்சார உற்பத்தி அதிகம் ஏற்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. அதே நேரத்தில் தொழில்களும், தொழிலாளர்களுடைய எண்ணிக்கையும் பெருகியிருக்கிறது. கனம் அங்கத்தினர் சொல்வது போல தொழிலாளர்களுடைய குடும்பங்கள் கஷ்டப்படவில்லை. உற்பத்தியாகிய மின்சாரம் நல்ல முறையில் எல்லோருக்கும் விநியோகமாக வேண்டும் என்கிற அடிப்படையில் தொழிலாளர்களும் சம்மதித்திருப்பதன் காரணமாகத்தான் இந்தக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தி யிருக்கிறோம்.

Sugar Mills

* 687 *Q*.—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the terms and conditions under which the loan of rupees five lakhs was granted to Arooran Sugar Limited during 1958;

(*b*) when the loan amount was disbursed; and